## யாழ்ப்பாணத்தினுடனான சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த இணைப்பை ஐக்கிய அமெரிக்க விமானப்படை மேலும் வலுவூட்டும்.

**ஆகஸ்ட் 12, 2016:**
வணக்கத்திற்குறிய சாமுவேல் நெவில் என்பவர் 1813ம் ஆண்டு தெல்லிப்பளையில் முதலாவது அமெரிக்கன் மிசனரி பாடசாலையை ஆரம்பித்தது முதல் அமெரிக்கர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகின்றனர். இப்பாடசாலைகள், யாழ்ப்பாணத்தை அண்டிய பிரதேசங்களிள் வாழ்ந்த மக்களுக்காக நிறைவாக நூற்றுக்கணக்கான பாடசாலைகளையும், வைத்திய நிலையங்களையும் அமைத்துக்கொடுப்பதிலும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் கற்பிப்பதிலும் விசேட அக்கறை கொண்டிருந்தன. எமது மக்களுக்கிடையிலுள்ள மிக ஆழமான இந்த இணைப்பை மேலும் தொடர்வற்காக எமது ஐக்கிய அமெரிக்க விமானப்படையினரின் ஒப்பரேஷன் பசுபிக் ஏஞ்சல் வேலைத்திட்டத்தின் மூலம் பாடசாலைகளை புனரமைப்பு செய்யவும் இப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்கவும் அடுத்தவாரம் யாழ்ப்பாணதிற்கு வருவதை காண்பதில் நான் பெருமையடைகின்றேன்.

2015ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் இந்த நாட்டின் அரசியல் செல்திசையில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசிய நல்லிணக்கம், நல்லாட்சி என்னும் உறுதிமொழியின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு புதிய அரசாங்கத்தை தேர்ந்தெடுத்ததன் மூலம் ஜனநாயக நிறுவனங்களையும், சட்டபூர்வமான தேசிய நீதித்துறையையும், தொடர்ந்து வளர்ச்சியடையக்கூடிய சிவில் சமூக அமைப்புக்களையும் சிதைப்பதற்கு உறுதிபூண்டிருந்த அதிகரித்துசென்ற சர்வாதிகார ஆட்சிமுறையைக்கொண்ட அசாங்கத்தை உங்கள் வாக்காளர்கள் கடந்த ஆண்டு இரண்டு முறை நிராகரித்துள்ளனர். இந்த அரசாங்கம் இலங்கையின் வெவ்வேறு சமூகங்களுக்கிடையிலும் சர்வதேச சமூகங்களுக்கிடையிலும் உறவை வளர்ப்பதற்கும், மிகவும் பிரகாசமான அரசியல் மற்றும் பொருளாதாரத்தை நோக்கிய எதிர்காலத்திற்காகவும், பல முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

ஐக்கிய அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி அவர்கள் "நீங்கள் ஒரு உறுதியான ஜனநாயகத்தையும் பல ஆண்டுகளாக துன்பங்களையும் வேதனைகளையும் கடந்துவந்து சமாதானத்தையும் சௌபாக்கியத்தையும் குறிக்கும் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்போதும் உங்கள் பக்கத்தில் ஐக்கிய அமெரிக்கா இருக்கும்" என்று கூறிய உறுதிமொழியின் பிரதிபலனாக இலங்கைக்கு வரும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை உங்களில் அதிகமானோர் அவதானித்திருப்பீர்கள். இலங்கையின் சர்வதேச நிலைப்பாடு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியுதவி மற்றும் போர்பயிற்சிநிலை என்பவற்றைத் தாங்கிநிற்பதற்கான ஐக்கிய அமெரிக்காவின் முழுஅளவிலான தொடர்ஆதரவினை இப்படியான வருகைகள் முதன்மைப்படுத்திக் காட்டுகின்றன.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடந்த வன்முறைகளின் பயங்கரத்தையும், ஜனநாயகத்திற்கெதிரான அரசாங்கங்களையும் நாம் எல்லோரும் மறந்திருக்கமாட்டோம். அந்த நிலையை இன்று ஒப்பிடுவோமானால். சிவில் சமூக அமைப்புக்குழுக்கள் உயர்ந்தநியையில் இருந்து அரசாங்கத்தின் தீர்மானங்களிலும் மற்றும் காரிய சாதனைப் படையணியிலும் முக்கிய ஆலோசகர்களாக திகழ்கின்றன. ஊடகவியலாளர்களில் அனேகமானோர் சுதந்திரமாக எழுதுவதுடன் கடத்தல் தொடர்பான கவலையின்றி பாரம்பரிய மற்றும் சமூக ஊடகங்களில் பலமான விமர்சனங்களை வெளியிடுகின்றனர். ஹோட்டல்கலும், வியாபாரஸ்தாபனங்கலும், உணவகங்கள் விடுதிகலும் யாழ்ப்பாணத்திலும் வேறு பல இடங்களிலும் புதிதாக

ஆரம்பிக்கப்படுகின்றன. மற்றும் இலங்கை பாராளுமற்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டமூலம் காணாமற்போனோர் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களின் உரிமைகளையும் அக்கறையையும் பாதுபாப்பதில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும்.

அத்துடன் பசுபிக் ஏஞ்சல் உதவி செயற்றிட்டம் யாழ்ப்பாணத்தில் உபகரணங்களை வழங்குவதற்காகவும், உள்ளூர் மக்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக புனர்நிர்மான வேலைகளைச் செய்யவும் இலங்கை விமானப்படையுடன் இணைந்து செயற்படும். எங்களது வேலைத்திட்டங்களும் இங்கு வரும் விருந்தினர்களும் உங்களுடன் இணைந்து செயற்படுதல், இலங்கையின் பலதரப்பட்ட சமூகங்களுக்கிடையில் சகல மட்டங்களிலும் உறவினை வலுப்படுத்துதல் என்னும் விடயங்களில் எங்களது உறுதியளித்தலின் ஒரு அங்கமாகும். ஜனநாயக நிலைமாற்றத்துடன், தொல்லைகள் அதிகரித்துவரும் உலகிள் உங்களது நாடு சமாதானத்துக்கும், ஒருமைப்பாட்டிற்கும், ஜனநாயகத்திற்கும், சுபீட்சத்திற்கும் ஒரு பிரகாசமான உதாரணமாக விளங்கவேண்டும் என்ற இலங்கை மக்களின் நோக்கத்தை நாம் எல்லோரும் பகிர்ந்து கொள்வதால் பரந்துபட்ட சர்வதேச உதவிகள் மிகவும் சிறப்பாக உங்கள் பின்னால் வருகின்றன.

# # #